பாதையிலே அது இருக்கிறது. நாயக்கரால் கட்டப்பட்ட அற்புத சிலைகள் அங்கு பக்கத்திலே இருக்கின்றன. அங்கு வருகிறவர்கள் அதையும் பார்ப்பதற்கேற்றவாறு விளம்பரப் பலகைகள் வைக்கப்படும்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து புதுமண்டபம் வரை சுரங்கப் பாதை செல்வதாகக் கூறுகிறார்களே, அது உண்மையா? அது சோதனை செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி சோதனை செய்வதற்குத் தகுந்த பயிற்சி பெற்றவர்கள் இல்லை.

பாரத மாதா கோயில் கால்கோள் விழா

576—(* வினா எண் 9596) திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசபந்து தாசைக்கொண்டு சுப்பிரமணிய சிவா சுதந்திரத்திற்கு முன்பு பாரத மாதா கோயிலுக்கு கால்கோள் நடத்தியது உண்மையா?

(ஆ) தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாகவும், சுப்பிரமணிய சிவாவின் நினைவாகவும், தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் பாரதமாதா கோயில் எழுப்ப அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நினைவாக 1984-ல் நினைவுத்தூண் ஒன்று நிறுவப்பட்டு தமிழக அரசால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அந்த இடத்தில் பாரதமாதா கோயில் எழுப்புவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

1987 மே 4]

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சிவா நினைவுச் சின்னமாக, ஒரு இலட்சம் ரூபாயில் ஒரு தூண் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே பாரத மாதா ஆலயம் ஒன்று அமைப்பதற்காக இடம் வாங்கப்பட்டு, அந்த இடத்தில்தான் அது அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும்கூட சிறப்பாகச் செய்து, அது நல்ல நினைவுச் சின்னமாக, வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் பார்த்துச் செல்கிற அளவுக்கு அமைக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தூணைச் சுற்றி ஒரு பார்க் கூட பராமரிக்கப்பட்டு வருகிறது. வேண்டுமானால், வருகிறவர்கள் கவனத்தை ஈர்க்கும்படியாக அதிலே விளம்பரப் பலகைகளும் அல்லது அவர் செய்த சேவைகளைப் பற்றி எழுத்தால் எழுதி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஒற்றுமை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிற இன்றைய நிலையில், தேசிய விடுதலைக்காக தன்னுடைய முழுமையான வாழ்க்கையை அர்ப்பணித்த நிகாற்ற ஒரு விடுதலை வீரரான சுப்பிரமணிய சிவாவைக் கௌரவிப்பதற்காக அல்லது இந்த இந்தியாவின் தேவையைப் பூர்த்தியாக்குவதற்காகவாவது, அவற்றை, அவர் கருதிய அந்த நோக்கத்தை மாநில அரசு நடைமுறையில் நிறை வேற்றுகின்ற முறையில், பாரத மாதா கோயிலை அமைப்பதோடு, சுப்பிரமணிய சிவாவின் வரலாற்றுக் குறிப்புக்களைத் தொகுத்து, மலிவுப் பதிப்பில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சிவா அவர்களுடைய வரலாற்றுக் குறிப்பினைத் தொகுத்து வெளியிடலாம்.

திரு. கோ. வீரய்யன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது சொன்னார்கள், சுப்பிரமணிய சிவாவின் பெயரிலே ஒரு நினைவுத் தூண் எழுப்பப்பட்டிருக்கிறது; பூங்கா ஒன்று அமைக்க இருக்கிறோம்; ஆனால் பாரத மாதா கோயில் எழுப்பும் உத்தேசம் இல்லை என்று. பாரத மாதா கோயில் எழுப்பாவிட்டாலும் சுப்பிரமணிய சிவா அவர்களுடைய நினைவாக நினைவு மண்டபம் ஒன்று நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இசைவைப் பெற்று அங்கு ஒரு பெரிய நூற்பாலையை ஏற்படுத்தி, அந்த நூற்பாலைக்கு சிவா அவர்களுடைய பெயர் வைக்கவேண்டும் என்ற கருத்துரு மைய அரசிற்கு அனுப்பப்பட்டு, மைய அரசின் நிலுவையிலே அது இருந்து வருகிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே காசியிலேதான் பாரத மாதா கோயில் என்று சொல்லி, ஒரு நினைவுச் சின்னம் சுதந்திரப் போராட்ட வீரரால் நிர்மாணிக்கப்பட்டு, இந்தியாவின் வரைபடத்தையே பாரத மாதாவின் திரு உருவச் சிலையாகக் கொண்டு இருக்கிறது. இன்றைக்கு சுதந்திரப் போராட்டத்தினுடைய தமிழக வீரர் சுப்பிரமணிய சிவா அவர்கள் ஒரு பாரத மாதா கோயிலுக்கு அடிகோலியிருக்கிறார் என்ற கருத்தின் அடிப்படையில் வடநாட்டில் இருப்பது போல, தமிழகத்திலேயும் இதுபோன்ற பாரத மாதா கோயிலை அமைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத மாதா கோயிலுக்கு அடிக்கல் நாட்டப்படவில்லை. அடிக்கல் நாட்டப்பட்ட கல்லிலே உள்ள வாசகம்—"ருத்ரோத்காரி வருஷம், வைகாசி மாதம் ஸ்ரீமான் தேசபந்து ஸ்ரீசித்தரஞ்சன்தாஸ் அஸ்திவாரக்கல் நாட்டினார்." பாரதபுரம் என்ற ஒரு பெயரிடுவதற்காக நாட்டப்பட்டிருக்கிறது. அதுவும், தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு உறுதுணையாக இருந்த நண்பர் திரு. எம். சின்னமுத்து முதலியார் அவர்களது குமாரர் திரு. எம். சி. கந்தசாமி முதலியார் அவர்களுடைய வீட்டிலே இருக்கிறது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகி சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா அவர்களுடைய சமாதி எங்களுடைய தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் அமைக்கப்பட்டு, நினைவுச் சின்னம் ஒன்று எழுப்பப்பட்டு இருப்பதாக அறிகிறேன். தர்மபுரி மாவட்டத்திலே மிகுந்த சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய ஒகனேக்கல் நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில்தான், போகிற வழியிலேயே,

1987 மே 4]

பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவாவின் சமாதி இருக்கிற காரணத்தால், தர்மபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக ஒகனேக்கல் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் திரு. சுப்பிரமணிய சிவாவின் நினைவுச் சின்னம் ஆகியவற்றோடு பாரத மாதா கோயிலையும் ஒருங்கிணைத்து அமைத்தால் சுற்றுலா வளர்ச்சி நன்கு அமைவதோடு முன்னேற்றமடையவும் உதவியாக இருக்கும் என்பதால் அதற்கு அரசு வழிவகை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகனேக்கல்லின் தொங்கு பாலம் இன்னும் நான்கு அல்லது ஐந்து மாதங்களில் முடிவு பெற்றுவிடும். எனவே போகிற பாதையில் இவருடைய நினைவு இடம் இருக்குமானால் அதையும் சுற்றுலாப் பயணிகள் பார்த்துச் செல்லுவதற்கான வகையில் அதைக் கவர்ச்சிகரமாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் அங்கே பாரத மாதா கோயில் அமைக்கப்படவில்லை என்றும், பாரதபுரம் என்பதற்கான அடிக்கல் மட்டும் நாட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். எனவே, குறைந்தபட்சம் பாரதபுரம் என்ற பெயரில், மறைந்த திரு. சுப்பிரமணிய சிவாவுக்கு நினைவு அஞ்சலியாக அங்கே ஒரு குடியிருப்பையாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய ஆவலாய் இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்துபற்றி அரசு ஆய்வு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலா மையங்கள்

577—(* வினா எண் 9534) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாபனாசத்தைச் சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆக்கப்படும்?